අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/1/6/5/1/SBLEG – NNS I (2021)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:

දිනය / திகதி / Date: 2022.10.14

**சுற்றுநிருப இலக்கம்:** 34/2022

**பாடசாலை பெயர்:** ..............................................................................

..............................................................................

**கல்வித் துறைசார் அபிவிருத்தித் திட்டம்: பொதுக் கல்வி (2018-2024)**
**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்(GEM Project)**
**கல்வி அமைச்சு**

**விடயம்: உலக வங்கி கடன் நிதியின் கீழ் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கூறுகளூடாக பாடசாலையினுள் விளைதிறன் மிக்க மற்றும் புண்புத்தரம்மிக்க கல்வியை வழங்கும் நோக்கில் புதிய தேசிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்படும் "பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்பு வழங்கல்" (School-Based Learning Enhancement Grant - SBLEG) (2021)**

**1.0** பொதுக் கல்வியின் பண்புத்தர அபிவிருத்திக்காக உலக வங்கியின் கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமானது 2018-2024 காலப்பகுதியில் கல்விப் புலத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும். பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை அரசு நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொள்ள முடியுமாவது இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் பெறுபேறுகள்/ குறிகாட்டிகளை அடைந்துகொள்வதனூடாக மாத்திரம் என்பதால் இச் செயற்றிட்டத்தை பாடசாலை முறைமையினுள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதனூடாக மாத்திரமே இக் குறிகாட்டிகளை அடையமுடியும் என்பதுடன், இதனூடாகவே இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசுக்கு நிதி உதவி கிடைக்கப்பெறும்.

இச் செயற்றிட்டத்தின் கூறுகள் பெரும்பாலான அளவில் செயற்படுத்தப்படுவது பாடசாலை மட்டங்களிலேயே என்பதுடன், அக் கூறுகளை பாடசாலைகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதே போன்று, இந் நிதி ஒதுக்கீடுகளை உபயோகித்து பாடசாலைக் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். அரசின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை அறிக்கைக்கமைய அதனடிப்படையில் இப் புதிய தேசிய பாடசாலைகளுக்கு இறுதி வழங்கல் ஒன்றாக (Outright Grant) இப் பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்புக்கான வழங்கலொன்றை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளது. இவ் வழங்கலை முறையாக உபயோகித்தல் தொடர்பான ஆலோசனைகள் இச் சுற்றுநிருபத்தினூடாக வெளியிடப்படுகின்றது.

குறிப்பு: மாகாண பாடசாலைகளுக்குரிய வழங்கல் மாகாண நிதி ஒதுக்கீட்டில் இருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.0** இச் செயற்றிட்டத்தின் பிரதான கூறுகள் மற்றும் பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந் நிதி ஒதுக்கீடுகளை பிரயோகிப்பதற்காக பாடசாலை அடிப்படையில் செயற்படவேண்டும் என்பதுடன், இந் நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் வலுவான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக, மாணவர்களின் கற்றல் அடைவு

மட்டங்களை மேம்படுத்துவதற்குரிய விசேட செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள், ஆசிரியர்களது தொழில் வாண்மை விருத்திக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள். விடயம் சார் நிகழ்ச்சித்திட்டங்கள், இணைப்பாடவிதான மற்றும் மேலதிக பாடவிதான செயற்பாடுகள் ஒட்டுமொத்தமாக பாடசாலைக் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாணவர்களது கற்றல் அடைவு மட்டங்கள் மற்றும் மாணவர்களிடையே உயர் மட்டத்திலான கற்றல் தேர்ச்சிகளை (higher-order learning competencies) மேம்படுத்தும் செயற்பாடுகளுக்காக இவ் வழங்கலை உபயோகிக்க நடவடிக்கையெடுக்கவேண்டும்.

**3.0** இவ் வழங்கலில் கீழ் தங்களது பாடசாலைக்கு ரூ. ........................... நிதி ஒதுக்கீடு இறுதி வழங்கலொன்றாக (Outright Grant) அத்தொகை தங்களது பாடசாலையின் "பாடசாலை அபிவிருத்தி வங்கிக் கணக்கில்" கல்வி அமைச்சின் கணக்குப் பிரிவினூடாக வைப்பிலிடப்படும். இவ் வழங்கலானது உலக வங்கியின் கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்குரிய" (General Education Modernization Project)" நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படுகின்றது. இவ்வழங்கலினூடாக செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்/செயற்றிட்டங்கள் தொடர்பாக உங்கள் பாடசாலையினால் முன்னெடுக்கப்படும் செயற்திறன் மற்றும் செயல்அடைவினை கருத்தில் எடுத்து செயல்அடைவின் அடிப்படையில் (Performance-Based) பொறிமுறைக்கேற்ப மூன்றாம் கட்டத்தின்கீழ் வழங்கலை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**4.0 நிதி வழங்கலை உபயோகிக்கவேண்டிய துறைகள் மற்றும் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான முன்னுரிமை**

ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் போது பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கூறுகளை 10 இனை அடிப்படையாக கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

- ஆங்கில மொழிக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டம்.
- கணித மற்றும் விஞ்ஞான அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டம்.
- மாணவர்களின் தொழில் வழிகாட்டி வேலைத்திட்டங்கள்.பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- பாடசாலை முகாமைத்துவம் மற்றும் தர நிர்ணய நிகழ்ச்சித்திட்டங்கள்.
- பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் (சிறுவர்களின் சமூக உணர்வுத் திறன்களை அபிவிருத்தி செய்வதற்குரிய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டும்.)
- சமூக ஒருமைப்பாடு, சமாதானம் மற்றும் நல்லிணக்க மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்.
- உட்படுத்தல் கல்வி அபிவிருத்திக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள்
- பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்.
- பாடசாலைக்கான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல், பராமரித்தல் மற்றும் திருத்தச் செயற்பாடுகள்

இக் கூறுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்படும் வழங்கலிளிருந்து மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட திருத்தம் செய்வதற்காக **50%** உச்சளவிற்கு கட்டுப்பட்டு நடைமுறைப்படத்தப்படுலாம். இக் கூறுகள் தொடர்பாக தெளிவான விபரங்கள் அடங்கிய குறிப்பொன்று **இணைப்பு 01 [SBLEG-NNS I (2022)]** இல் வழங்கப்பட்டுள்ளது.

இவ் வழங்கலூடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவக் குழு ஆகியன கலந்துரையாடி முன்னுரிமையடிப்படையில் இனங்காணல் வேண்டும். அதனடிப்படையில் இவ் வழங்கலினூடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்பாடுகளை **பாடசாலையின் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தின் (2022) கூறுகளாக உப திட்டமொன்றை இணைப்பு 02 [SBLEG-NNS I (2022)] இலுள்ள மாதிரிக்கமைவாக தயாரித்து அத்திட்டத்தை ஒரு மாத காலத்தினுள் உரிய வலய கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்) தேசிய பாடசாலை கிளைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.**

**குறிப்பு:** மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்கனவே கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கமைவாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

## 5.0 நிதியை ஏற்றுக்கொள்ளல்

கல்வி அமைச்சினால் வழங்கப்படும் பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்பு வழங்கலுக்குரிய இந் நிதியானது உரிய பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் வைப்பிலிடப்படும். இவ் வழங்கல் கிடைக்கப்பெற்ற உடன் உரிய பாடசாலையின் அதிபர் அது தொடர்பாக 2018.06.22ம் திகதியுடைய இலக்கம் 2018/26 சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளுக்கமைவாக உரிய மாதிரிப் படிவத்தை உபயோகித்து இவ் வழங்கல் கிடைக்கப் பெற்றதாக தெரிவிக்கும் கடிதமொன்றை "கணக்காளர்/ கொடுப்பனவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு கட்டாயம் அனுப்பிவைத்தல் வேண்டும். இக் கடிதத்தினதும் உரிய இரசீதினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை "கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலைகள் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**6.0** இவ் வழங்கலினூடாக கிடைக்கப்பெறும் நிதியை பாடசாலை அபிவிருத்திக் கணக்கிலேயே வைப்பிலிட வேண்டும். மேலும், இவ் விசேட வழங்கலுக்காக செலவு அறிக்கையில் (லெட்ஜர்) பிரத்தியேகமாக ஒரு பக்கத்தை பேணிவரல் வேண்டும் என்பதுடன் உரிய கணக்கறிக்கைகள் பிரத்தியேகமாக பேணப்படல் வேண்டும். **இவ் வழங்கலின் கீழ் கிடைக்கப்பெறும் நிதியானது 2023 செப்டெம்பர் மாதம் 28ம் திகதிளவில் முழுமையாக செலவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.**

**7.0** 2018.06.22 திகதியுடைய இலக்கம் 2018/26 சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைவாக நான்கு மாத கணக்கறிக்கையை முன்னிலைப்படுத்தும் போது இந் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றமும் அதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் **2023 மார்ச் மாதம் 31ம்** திகதிக்கு முன்னர் முன்வைக்கப்படுதல் வேண்டும். இதற்காக **இணைப்பு 03 [SBLEG-NNS I (2022)]** மாதிரிப் படிவத்தை உபயோகிக்க வேண்டும். பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைகளை "கல்விப் பணிப்பாளர்/ தேசிய பாடசாலைகள், கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" மற்றும் கல்விப் பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் செயல்திறன் மீளாய்வு) ஆகியோருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## 8.0 கண்காணிப்பு, அறிக்கைப்படுத்தல் மற்றும் கணக்காய்வு

இவ் வழங்கலை உபயோகித்து குறுகிய காலம் கொண்ட விளைதிறன் மிக்க செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதனூடாக பாடசாலை மாணவர்களது கற்றல் அடைவு மட்டங்கள் மேம்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வழங்கல் விளைதிறன் மிக்க வகையில் உபயோகிக்கப்படுகின்றமை தொடர்பாக கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் கிளையின் கல்விப் பணிப்பாளர் நேரடியாக கண்காணிப்பார் என்பதுடன், கல்விப் பணிப்பாளர் (கணிதம், ஆங்கிலம், பாடசாலை நூலகங்கள், பாடசாலை சுகாதாரம் மற்றும் போசாக்கு, முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாடு, ஆசிரியர் கல்வி நிர்வாகம்) ஆகியோரும் தமது விடயப்பரப்புக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக கண்காணிப்பர்.

அதற்கு மேலதிகமாக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் இவ் விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வைகளை மேற்கொள்வர். அதே நேரம் இவ் வழங்கலின் பாவனையானது கணக்காய்வுக்கும் உட்படுத்தப்படும்.

**9.0** இச் சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய முரண்பாடுகள் ஏதும் இருப்பின் அது தொடர்பாக பொருள் கூறல் மற்றும் இறுதி முடிவுகளை எடுப்பதற்குரிய அதிகாரம் கல்விச் செயலாளரையே சாரும்.

**எம்.என்.ரணசிங்க**
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்:**

1. கணக்காய்வாளர் நாயகம்
2. சகல மேலதிக செயலாளர்கள், கல்வி அமைச்சு
3. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
4. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
5. சகல மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள்(திட்டமிடல்)
6. சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள்
7. பணிப்பாளர் நாயகம்/ நிதி முகாமைத்துவம், கல்வி அமைச்சு
8. பிரதான நிதி அதிகாரி, கல்வி அமைச்சு
9. பிரதான கணக்காளர்/ நிதி முகாமைத்துவம், கல்வி அமைச்சு
10. பிரதான கணக்காளர்/ செயற்றிட்ட முகாமைத்துவம், கல்வி அமைச்சு
11. பிரதான உள்ளக கணக்காய்வாளர், கல்வி அமைச்சு
12. பிரதான ஆணையாளர், கல்வியற் கல்லூரி, கல்வி அமைச்சு.
13. கணக்காளர்/ பல்வகை கணக்குகள், கல்வி அமைச்சு
14. கணக்காளர்/ கொடுப்பனவுகள், கல்வி அமைச்சு
15. சகல கல்விப்பணிப்பாளர்கள்.

இணைப்பு 02 [SBLEG-NSI

# கல்வி துறைசார் அபிவிருத்தித்திட்டம் (2018-2024)
## பொதுக்கல்வி நவீன மயமாக்கல் திட்டம் (GEM Project)
## கல்வி அமைச்சு
### “பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்பு வழங்கல்” (School-Based Learning Enhancement Grant-SBLEG) (2022)

| தொடர் இல | நிகழ்ச்சித்திட்டம்/திட்டம் | நோக்கங்கள் |
|---|---|---|
| 1 | ---------------------------------- | 1.1 ----------------------------------<br>1.2 ----------------------------------<br>1.3 ---------------------------------- |
| 2 | ---------------------------------- | 2.1 ------------------------------<br>2.2 ------------------------------<br>2.3 ------------------------------ |

| தொடர் இல | நிகழ்ச்சித்திட்டம்/திட்டம் | கால அளவு | மதிப்பீட்டு தொகை | எதிர்பார்க்கும் விளைவு (Output) | கற்றல் பெறுபேறு (Outcome) | செயற்படுத்தும் பொறுப்பு | பிற குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

மேற்படி விடயங்கள் மற்றும் தகவல்கள் உண்மையென உறுதியளிக்கின்ளேன்.

**கையொப்பம்** : ..................................................

**அதிபர் பெயர்** : ..................................................

**திகதி** : ..................................................

**பிரதி :** மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித்திணைக்களம்

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரை செய்கின்றேன்.

**கையொப்பம்** : ..................................................

வலயக்கல்வி பணிப்பாளர் : ..................................................

(அதிகாரபூர்வ முத்திரை)

**திகதி** : ..................................................

வலயக் கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்

இணைப்பு 03 [SBLEG-NSI

## கல்வி துறைசார் அபிவிருத்தித்திட்டம் (2018-2024)
## பொதுக்கல்வி நவீன மயமாக்கல் திட்டம் (GEM Project)
## கல்வி அமைச்சு
### "பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்பு வழங்கல்" (School-Based Learning Enhancement Grant-SBLEG) (2022)

பாடசாலை மட்ட பொதீக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கை

பாசாலை பெயர் : ......................................................

| பாம.க.ஊ.வ.கீழ் நிதி கிடைக்கப்பெற்ற தொகை ரூபா | நிதியளிக்கப்பட்ட திகதி | நிறைவேற்றப்பட்ட திட்டம் / திட்டங்கள்/ | செலவு மதிப்பீடு ரூபா | 2022 .......... திகதிய பௌதீக முன்னேற்றம் | 2022 ........... திகதிய நிதி முன்னேற்றம் | பிற குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேல் உள்ள விபரங்கள் மற்றும் தகவல்கள் உண்மையென உறுதியளிக்கின்றேன்

மேற்கூறப்பட்ட வரவு செலவுத்திட்டம் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டது, மற்றும் நிதி முன்னேற்றம் சரியானது என்று உறுதியளிக்கின்றேன்.

**கையொப்பம்** : ..................................................

**அதிபரின் பெயர்** : ..................................................

**திகதி** : ..................................................

**கையொப்பம்** : ..................................................

வலயக்கல்வி பணிப்பாளர் : ..................................................

அதிகாரபூர்வ முத்திரை

திகதி : ..................................................

**பிரதி :** மாகாண கல்விப்பணிப்பாளர், மாகாண கல்வித்திணைக்களம்

வலயக்கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்

132